அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

பேச்சு 2017 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

# "நல்ல நூல்களைப் படிப்போம்"

**அன்பான நண்பர்களே, உங்களுக்குப் பிடித்தமான விளையாட்டுப் பொருட்கள், இனிப்பு வகைகள் என்று எல்லாம் இருக்கிறது அல்லவா? அதுபோல, நம் வாழ்வுக்கு மிகவும் முக்கியமானது நூல்கள், அதாவது புத்தகங்கள்.**

**புத்தகங்கள் நம்முடைய நல்ல நண்பர்கள். ஒரு நல்ல புத்தகம் நம்மை வேறு ஒரு புதிய உலகிற்கு அழைத்துச் செல்லும். புத்தகங்களைப் படிக்கும்போது என்ன நடக்கும் தெரியுமா? நம்முடைய சொல்வளம் செழிக்கும், அறிவு வளரும், நமது கற்பனைத் திறன் பெருகும், அதனால் நம்மால் துணிச்சலாகப் பேசவும் முடியும்.**

**ஒரு நல்ல புத்தகம், ஒரு நல்ல நண்பனுக்கு ஒப்பாகும். தினமும் சிறிது நேரம் அறிவு ஊட்டும் நூல்களைப் படிக்க, நாம் நேரம் ஒதுக்க வேண்டும். வீட்டில் இருக்கும் புத்தகங்களையும் படிக்க வேண்டும்.**

**நல்ல நூல்களைப் படிக்கும் பழக்கம், நம்மை நல்ல குழந்தையாகவும், எதிர்காலத்தில் சிறந்த மனிதராகவும் மாற்றும்.**

**வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்பார்கள். எனவே, இன்றிலிருந்து நாம் அனைவரும் சேர்ந்து நல்ல நூல்களைத் தேடிப் படிப்போம்!**

**நன்றி! வணக்கம்!**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.